# "வறுமையை இட்டுச் செல்லும் மதுபாவனை : கல்முனை தமிழ் மற்றும் முஸ்லிம் பிரதேச செயலகத்தை மையமாகக் கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வு"

**Supervisor**
*Mrs. AWF. Naleefa,*
*Lecturer (Prob.),*
*Faculty of Arts and Culture*

**Researcher**
*Mr. MHM. Irshath,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts and Culture*

நாம் அன்றாடம் வாழ்வில் பல்வேறுபட்ட பிரச்சினைனகளை எதிர் நோக்குகின்றோம். இவை எமது சமூக சூழ்நிலைக்கும் நெறிமுறைக்கு முரணானதாக உணரப்படுகின்றது. இந்தவகையில் மது பாவனை முக்கியமான சமூகப்பிரச்சினையாக அடயாளப்படுத்தப்பட்டுள்ளது. இப்பாவனை நவீன பண்பாட்டுடன் பின்னிப்பிணைந்ததாக காணப்படுகிறது. மது பாவனைக்கு விரக்திநிலைஇ பொழுது போக்குஇ அடிமையான நிலை மற்றும் சமூக அந்தஸ்து போன்ற காரணிகள் முக்கியமானதாக அமைகிறது. இந் நிலை நேரடியாகவோ மறைமுகமாகவோ வறுமையெனும் மற்றுமொரு சமூகப்பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளது. இது சமூகத்தில் பல்வேறுபட்ட பாதகமான நிலையைத் தோற்றுவித்துள்ளது. குறிப்பாக இப்பாவனையால் ஏற்படும் தொடர்ந்தேர்சியான நோய்கள் குணப்படுத்தப்படமுடியாத நிவைலயையும், பெருந்தொகைப்பணங்களை செலவு செய்யக்கூடிய துர்பாக்கிய நிலையையும் தோற்றுவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனால் பல சொத்துக்கள் இழக்கப்டுவதோடு வருமான மட்டத்திலும் சரிவு ஏற்பட்டு வறுமையெனும் மற்றுமொரு சமூகப்பிரச்சினை தோற்றுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பபிடத்தக்கது. இத்தகைய மது பாவனையானது வறுமையை இட்டுச் செல்வதில் எத்தகைய பங்கினை வகிக்கின்றது என்பதனை கல்முனை தமிழ் முஸ்லிம் பிரதேச செயலகத்தை மையமாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளளப்பட்டுள்ளது. மது பாவனை சமூக மட்டத்தில் எத்தகைய வறுமை நிலையைத் தோற்றுவித்தள்ளது என்பதனை நோக்காகவும் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளளப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்கான தகவல்கள் முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை மூலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டன. முதலாம் நிலை தரவில் வினாக்கொத்து (questionnaire), பேட்டி காணல்(Interview) அவதானம் (Observation), இலக்குக் குழு கலந்துரையாடல் (Focus Group Discussion - FGD) போன்றவை அடங்குகின்றன. இரண்டாம் நிலைத் தரவில் முக்கியமாக மதுவரித்திணைக்கள அறிக்கைகள் மருத்துவ அறிக்கைகள், பொலிஸ் அறிக்கைகள், என ஏனைய மூலகங்களும் அடங்குகின்றன. இவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகள் எண்ணளவான முறை (Quantitative method) மற்றும் தர அளவிலான முறை (Qualitative method) என்வற்றின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்படுள்ளன. இறுதியாக இவ் ஆய்வு அதிகரித்து வரும் மது பாவனைக்கும் வறுமைக்கமிடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது என முடிவுரைக்கிறது.

***Key words***: மது பாவனை (Alcoholism), வறுமை (poverty)